**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.389/2019 எம்.சி.ஓ.பி.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக்தனபால் | வட்டம் | : | ஈரோடு |
| த/பெ. | : | தனபால் | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | - | தொழில் | : | வங்கி கிளை மேலாளர் |
| கிராமம் | : | வீரப்பன்சத்திரம் | வயது | : | 45 |

**வா.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

21.07.2007-ம் தேதியிட்ட கல்விக்கடன் விண்ணப்பம் (அசல்) **வா.சா.ஆ.1** ஆகவும், 21.07.2007-ம் தேதியிட்ட கல்விக்கடன் வங்கியால் ஒப்புதல் செய்யப்பட்ட கடிதம் (அசல்) **வா.சா.ஆ.2** ஆகவும், 24.07.2007-ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு (அசல்) **வா.சா.ஆ.3** ஆகவும், 24.07.2007-ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு டெலிவரி கடிதம் (அசல்) **வா.சா.ஆ.4** ஆகவும், 24.07.2007-ம் தேதியிட்ட கல்விக்கடன் ஒப்பந்தம் (அசல்) **வா.சா.ஆ.5** ஆகவும், 24.07.2007-ம் தேதியிட்ட கல்விக்கடன் உத்திரவாத பத்திரம்

(அசல்) **வா.சா.ஆ.6** ஆகவும், 17.06.2010-ம் தேதியிட்ட கடனை அங்கீகரித்தற்கான ஒப்புதல் (அசல்) **வா.சா.ஆ.7** ஆகவும், 19.05.2013-ம் தேதியிட்ட கடன் புதுப்பிப்புக் கடிதம் (அசல்) **வா.சா.ஆ.8** ஆகவும், 05.04.2016-ம் தேதியிட்ட கடனை அங்கீகரித்தற்கான ஒப்புதல் (3 எண்ணிக்கை) (அசல்) **வா.சா.ஆ.9** ஆகவும், 04.03.2013-ம் தேதியிட்ட கடனை செலுத்தக்கோரிய கோரிக்கை அறிவிப்பு (அலுவலக நகல்) **வா.சா.ஆ.10** ஆகவும், திருப்பப்பட்ட அஞ்சலக உறை (3 எண்ணிக்கை) (அசல்) **வா.சா.ஆ.11** ஆகவும், 23.10.2013-ம் தேதியிட்ட கடனை செலுத்தக்கோரிய கோரக்கை அறிவிப்பு (அலுவலக நகல்) **வா.சா.ஆ.12** ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை (அசல்) **வா.சா.ஆ.13** ஆகவும், திருப்பப்பட்ட அஞ்சல உறை (2 எண்ணிக்கை) (அசல்) **வா.சா.ஆ.14** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**